بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 02/12/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 39**

***அன்னாரது வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் புகழத்தக்க பண்புகள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்***

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் உயரிய குணங்கள் பற்றியும் நற்குணங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டு வந்தது. அவர்கள் மக்களில் அனைவரையும் விட நேசத்திற்குரியவராக இருந்தார்கள் என்பது தொடர்பாக ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) அவர்களின் காலத்தில், நாங்கள் மக்களில் ஒருவரை மற்றவரை விடச் சிறந்தவராக எடுத்துரைத்து வந்தோம். அதாவது, எவர் சிறந்தவர் என்று கருத்துக் கணிப்பு நடத்தி வந்தோம். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனைவரையும் விடச் சிறந்தவர் என்று நாங்கள் கருதி வந்தோம். பிறகு ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி), பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள்.

ஒரு சந்த்ர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், ''ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மக்களில் அனைவரையும் விட சிறந்தவரே!'' என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனடியாக, உமரை விடச் சிறந்த ஒருவர் மீது சூரியன் உதிக்கவில்லை என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என்றார்கள்.

ஹஸ்ரத் சல்மான் (ரலி), ஹஸ்ரத் ஸுஹைப் (ரலி), ஹஸ்ரத் பிலால் (ரலி) ஆகியோர் மக்களிடையே அமர்ந்திருந்தார்கள். அப்போது அபூ ஸுஃப்யான் வந்தார்கள். அதைக் கண்ட அம்மக்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் வாள்கள் அல்லாஹ்வுடைய எதிரிகளின் கழுத்துகளுடன் இது வரை தம் கணக்கை சரி செய்யவில்லை என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நீங்கள் குரைஷியர்களின் தலைவர்களைக் குறித்து இவ்வாறு கூறுகிறீர்களா என்று

கேட்டார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தாமாகவே ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரான போது பெருமானார் (ஸல்) அவர்கள், அபூபக்ரே! நீங்கள் ஒருவேளை சல்மான், ஸுஹைப், பிலால் ஆகியோரைக் கோபமடையச் செய்து விட்டீர்கள். நீங்கள் அவ்வாறு செய்து விட்டீர்கள் என்றால், நீங்கள் உங்களுடைய இறைவனைக் கோபமடையச் செய்து விட்டீர்கள் என்றார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மூவரிடம் வந்தார்கள். அவர்களைப் பார்த்து, "அன்பிற்குரிய சகோதரர்களே! நான் உங்களைக் கோபமடையச் செய்து விட்டேனா?" என்றார்கள். அதற்கு அவர்கள், அவ்வாறு ஒன்றும் இல்லை என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தன்னடக்கம் எந்த அளவு இருந்தது என்பதும் இங்கு நிரூபணமாகிறது. எம்மக்களை அன்னார் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையும் செய்தார்களோ அந்த நபர்களிடத்தில் வருகிறார்கள்; அவர்களிடம் மன்னிப்பு கேட்கிறார்கள். அத்துடன், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீதான நேசம் மற்றும் கட்டுப்படுதலுடைய தரம் எந்த அளவு உயர்ந்ததாக இருந்தது என்றால், நீங்கள் கோபப்படுத்தி விட்டீர்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியபோது - நீங்கள் சென்று மன்னிப்பு கேளுங்கள் என்று அன்னார் கூறவில்லைதான்! ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனடியாக தாமாகவே சென்றார்கள். அம்மக்களிடம் மன்னிப்பு கேட்டார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் உயர்ந்த குணங்கள் மற்றும் சிறப்பான பண்புகளில் காணப்பட்ட ஒரு சிறப்பான விஷயம் இதுவும் ஆகும். அதாவது, ஹிஜ்ரத் பயணத்தில் தோழமைக்காக அன்னார் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். படைப்பினங்களில் அனைவரையும் விட சிறந்த நபரின் கஷ்டங்களின் போது அன்னார் உடன் இருந்தார்கள். மேலும், நேசத்திற்குரிய இறைவனுடன் அன்னாருக்கு சிறப்பான தொடர்பு நிரூபணம் ஆக வேண்டும் என்பதற்காக சோதனைகளின் ஆரம்பத்தில் இருந்தே ஹுஸூர் (ஸல்) அவர்களின் சிறப்பான நண்பராக ஆக்கப்பட்டிருந்தார்கள். இதில் இருந்த இரகசியம் என்னவென்றால், சித்தீக் அக்பர் அவர்கள் சஹாபிகளில் அதிக துணிவுள்ள முத்தகீ ஆகவும், அனைவரையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நேசராகவும், வீரராகவும் இருந்ததை அல்லாஹ் நன்கு அறிந்திருந்தான். மேலும், உலகின் தலைவராகிய ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நேசத்தில் அன்னார் அர்ப்பணமாகி இருந்தார்கள்.

*ஹுஸூர் அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் குறித்து தற்காலத்தில் சில கிழக்கத்தியவாதிகள் எழுதிய குறிப்பை எடுத்து வைத்தவாறு கூறினார்கள்:* (ஐரோப்பிய கிழக்கத்தியவாதிகளான) இம்மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மேலான, உயரிய நபித்துவ அந்தஸ்தின் புரிதலையும்,

அறிவையும் கொண்டிராத காரணத்தால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரை புகழ்வதில் எந்த அளவு மிகைப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள் என்றால், அது எவ்வகையிலும் சரியானதாக இருக்க முடியாது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆக இருந்தாலும் சரி! அல்லது ஹஸ்ரத் உமர் (ரலி) ஆக இருந்தாலும் சரி! இவர்கள் அனைவரும் தமது தலைவரும், பின்பற்ற தகுந்தவருமான ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முழுமையான விசுவாசிகளாகத் திகழ்ந்தார்கள். தொண்டாற்றக் கூடிய வகையில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்காக இவர்கள் கைகளாகவும் கால்களாகவும் ஆகி இருந்தார்கள்.

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நல்லொழுக்கங்கள் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்:** ''பெரும் பெரும் வல்லமை வாய்ந்த அரசர்கள் அபூபக்ர், உமர் ஆகியோரின் பெயரை உச்சரித்து விட்டு - இன்னும் கூறுவதாயின், அபூ ஹுரைரா அவர்களின் பெயரை உச்சரித்து விட்டு ரலியல்லாஹு அன்ஹு என்று கூறுவது உண்மை இல்லையா என்ன? அந்தோ! அவர்களுக்குத் தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பாவது நமக்குக் கிடைத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று அவர்கள் விரும்பியிருக்கிறார்கள். அபூபக்ர், உமர் மற்றும் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர் ஏழ்மையான வாழ்வைக் கழித்து சிறிது நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று யாராவது கூற முடியுமா என்ன? சந்தேகத்திற்கிடமின்றி அவர்கள் உலக ரீதியாக தம்மீது ஒரு மரணத்தை ஒப்புக் கொண்டிருந்தனர். ஆனால் அந்த மரணம் அவர்களின் வாழ்வாக நிரூபணமானது. இப்பொழுது எந்த ஒரு சக்தியாலும் அவர்களை அழிக்க இயலாது. அவர்கள் கியாமத் வரையிலும் உயிருடன் இருப்பார்கள்.''

**பிறகு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மேற்கொண்டு கூறுகிறார்கள்:** ''ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பாருங்கள்! அன்னார் மக்காவைச் சார்ந்த ஒரு சாதாரண வியாபாரியாக இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தோன்றியிருக்காவிட்டால், (அப்போது) மக்காவின் வரலாறு எழுதப்பட்டிருக்கும் என்றால், அபூபக்ர் அரேபியாவின் ஒரு நல்ல, நம்பிக்கைக்குரிய வியாபாரியாக இருந்தார் என்று மட்டுமே வரலாற்றாசிரியர் எழுதியிருப்பார். ஆனால், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றியதன் காரணமாக அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எவ்வாறான அந்தஸ்து கிடைத்துள்ளது என்றால், இன்று முழு உலகமும் மரியாதையுடன் அன்னாருடைய பெயரை உச்சரிக்கின்றது.''

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ''இஸ்லாத்தின் தொண்டு மற்றும் மார்க்கத்திற்காக தியாகங்கள் செய்தது ஆகியவற்றின் காரணமாக இன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குக் கிடைத்துள்ள மகத்துவம், உலகத்தின் பெரும் பெரும் அரசர்களுக்கும்

கிடைத்துள்ளதா என்ன? இன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எந்த அளவுக்கு மகத்துவம் உள்ளதோ அது உலகில் உள்ள அரசர்களில் ஒருவருக்குக் கூட கிடைக்கவில்லை. இன்னும் கூறுவதென்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் விஷயம் ஒருபுறம் இருக்கட்டும்; அன்னாருடைய பணியாளர்களைக் குறித்து பார்க்கும்போது முஸ்லிம்களைப் பொறுத்தவரை, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பணியாளர்களுக்குக் கிடைத்துள்ள கண்ணியம் கூட எந்தவொரு பெரும் பெரும் அரசர்களுக்குக் கிடைக்கவில்லை. உண்மை என்னவென்றால், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் நாய் கூட பெரும் மதிப்புமிக்கவர்களை விட நமக்கு நேசத்திற்குரியதாகும்! ஏனென்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வீட்டின் தொண்டராக ஆகிவிட்டார்கள். எவர் முஹம்மது (ஸல்) அவர்களின் வீட்டு வாசலின் அடிமையாக ஆகிவிட்டாரோ அவருடைய ஒவ்வொரு பொருளும் நமக்கு நேசத்திற்குரியதாக ஆகிவிடுகின்றது. இப்பொழுது எந்த ஒரு நபரும் இந்த மகத்துவத்தை நமது உள்ளங்களில் இருந்து அகற்ற இயலாது!"

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** "ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு மகன் நீண்ட காலத்திற்குப் பிறகு இஸ்லாத்தில் நுழைந்தார். அவர் ஒருமுறை ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் பள்ளியில் அமர்ந்திருந்தார். பல்வேறு விஷயங்கள் பேசப்பட்டு கொண்டிருந்தன. அப்பொழுது பேச்சுக்கிடையே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்து, தந்தையே! இன்ன போரில் நான் ஒரு பாறைக்குப் பின்னால் ஒளிந்திருந்தேன். நீங்கள் எனக்கு முன்னால் இருமுறை கடந்து சென்றீர்கள். நான் அப்பொழுது விரும்பியிருந்தால் உங்களைக் கொன்றிருக்க முடியும்! தாங்கள் என் தந்தையாக இருக்கிறீர்கள் எனக் கருதி நான் தங்களைத் தாக்கவில்லை என்று கூறினார். இதைக்கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அப்போது நான் உன்னைப் பார்க்கவில்லை! நான் உன்னை கண்டிருந்தால், நீ இறைவனுடைய எதிரியாக மைதானத்திற்குள் வந்திருந்த காரணத்தால் நான் உன்னை நிச்சயமாகக் கொன்றிருப்பேன் என்றார்கள்."

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மேலான நற்பண்புகள் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகிறார்கள்:** "அபூபக்கர் (ரலி) அவர்கள் எப்படிப்பட்ட நபராக இருந்தார்கள் என்றால், அவருடைய இயல்பியல் நற்பேறு எனும் எண்ணெயும், திரியும் முன்பே வைக்கப்பட்டிருந்தது. ஆகவே, தூய தூதர் (ஸல்) அவர்களின் பரிசுத்த போதனை அவர்களை உடனடியாக ஈர்த்து ஒளியூட்டியது. அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களிடம் எந்த விவாதமும் செய்யவில்லை. எந்த அடையாளத்தையும், அற்புதத்தையும் வேண்டவில்லை. [பெருமானார் (ஸல்) அவர்களின்] விஷயத்தை கேட்டு விட்டு உடனடியாக, நீங்கள்

நபித்துவ வாதம் செய்கிறீர்களா என்று மட்டும் தான் கேட்டார். ஆம்! என ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கூறிய போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நான் அனைவரையும் விட முதலில் ஈமான் கொள்கிறேன்; அதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள் என்று கூறினார்கள். கேள்வி கேட்கக் கூடியவர் மிக குறைவாகவே நேர்வழி பெறுவதாக அனுபவம் கூறுகிறது. ஆனால், நல்லெண்ணம் மற்றும் பொறுமையை மேற்கொள்ள கூடியவர் நேர்வழியிலிருந்து முழுமையாக பங்கு பெறுகிறார். இதன் முன்மாதிரி, அபூபக்ர் (ரலி) மற்றும் அபூஜஹ்ல் ஆகிய இருவரிடமும் இருக்கிறது. அபூபக்ர் (ரலி) அவர்கள் சண்டையிடவில்லை; அடையாளத்தை வேண்டவில்லை. ஆனால், அடையாளத்தை வேண்டுபவர்களுக்குக் கிடைக்காதது [அபூபக்ர் (ரலி)] அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அவர்கள் அடுத்தடுத்து அடையாளங்களைக் கண்டார்கள். அவர்களே ஒரு மாபெரும் அடையாளமாக ஆனார்கள். அபூஜஹ்லோ சண்டையிட்டான். எதிர்ப்பையும், அறிவீனத்தை விட்டும் ஒதுங்கி இருக்கவில்லை. அவன் எவ்வளவோ அடையாளங்களைக் கண்டான். ஆயினும் அவனால் (அதை அடையாளம்) காண இயலவில்லை! இறுதியில் பிறருக்கு அவனே அடையாளமாக ஆகி எதிர்ப்பிலேயே அழிந்து போனான்.''

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) கூறுகிறார்கள்:** ''என் இறைவன் என்மீது வெளிப்படுத்திய விஷயம் என்னவென்றால், சித்தீக், ஃபாரூக் மற்றும் உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர் நற்செயல் புரிபவர்களாகவும், நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருந்தார்கள். அல்லாஹ் தேர்ந்தெடுத்த மக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள், கருணைமிக்க இறைவனின் அருளால் சிறப்பிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். பெரும்பாலான இறைஞானிகள் இவர்களின் உயர் குணங்களுக்குச் சான்றளித்துள்ளார்கள். இவர்கள் மேன்மையும் சிறப்பும்மிக்க இறைவனின் தன்னிறைவிற்காக தங்கள் நாடுகளைத் துறந்தார்கள். ஒவ்வொரு போரின் உலையிலும் நுழைந்தார்கள். ஒவ்வொரு வெயிற்காலத்தின் மதிய உஷ்ணத்தையும், குளிர்காலங்களின் இரவின் கடுங்குளிரையும் இவர்கள் பொருட்படுத்தவில்லை. மாறாக, புத்தம் புதிய இளைஞர்களைப் போன்று மார்க்கத்தின் வழியில் தம்மை மாய்த்துக் கொண்டார்கள். தம்மவர்கள் பக்கமோ, அந்நியர்கள் பக்கமோ சாயவில்லை. அல்லாஹ் ரப்புல் ஆலமீனுக்காக அனைத்திற்கும் விடை கொடுத்து விட்டார்கள். அவர்களின் செயல்களிலும் நடவடிக்கைகளிலும் நறுமணம் கமழ்கிறது. இவையனைத்தும் அவர்களின் அந்தஸ்துகள் எனும் தோட்டங்களை நோக்கியும், அவர்களின் நன்மைகள் எனும் பூந்தோட்டங்களை நோக்கியும் வழிநடத்துகின்றன. அவற்றின் தென்றல் காற்று தனது நறுமணம் கமழும் வீச்சால் இவர்களின் இரகசியங்களைத் தெரிவிக்கின்றது. இவர்களின் ஒளிகள் தமது முழுமையான பண்பால் நம்மீது வெளிப்படுகின்றன.''

பிறகு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகிறார்கள்:** "இறைவன் மீது ஆணையாக**!** அல்லாஹ் இந்த இரு சான்றோர்களையும் - அதாவது, அபூபக்ர், உமர் மற்றும் அத்துடன் மூன்றாமவராக துன் நூரைன் (இரு ஒளிகளையும் உடையவர்) இருக்கின்றார். இவர்கள் ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர்கள் என்றால், இஸ்லாத்தின் வாயிலிலும், படைப்பினங்களில் சிறந்தவராகிய முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் படையின் முன்னணியிலும் இருப்பவர்களாக அல்லாஹ் இவர்களை ஆக்கியுள்ளான். ஆகவே, எவர் ஒருவர் அம்மக்களின் மேன்மையை மறுப்பாரோ, அவர்களின் தெளிவான சான்றை அற்பமாக நினைப்பாரோ, அவர்களுடன் நாகரிகமாக நடந்து கொள்ளாமல் அவர்களை இழிவுபடுத்துவாரோ, அவர்களை ஏசி பேசுவதற்கு எந்நேரமும் ஆயத்தமாக இருப்பாரோ, அவர்களை வசைபாடுவாரோ அவ்வாறான மனிதரின் தீய முடிவை குறித்தும், அவரின் ஈமான் வீணாகி விடுவதைக் குறித்தும் நான் அஞ்சுகிறேன்."

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகிறார்கள்:** "உண்மை என்னவென்றால், அபூபக்ர் சித்தீக் மற்றும் உமர் ஃபாரூக் ஆகிய இருவரும் பெரும் சஹாபிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவ்விருவரும் உரிமைகளை செலுத்துவதில் ஒருபோதும் கவனமற்று இருக்கவில்லை. அவர்கள் இருவரும், இறையச்சத்தைத் தமது வழியாகவும், நீதியைத் தமது குறிக்கோளாகவும் ஆக்கிக் கொண்டார்கள். அவ்விருவரின் உண்மைத்தன்மையும், கலப்பற்ற நிலையும் எந்த அளவு உயரிய அந்தஸ்தைக் கொண்டுள்ளது**!** இருவரும் எப்படிப்பட்ட அருளுக்குரிய கபரில் அடக்கம் செய்யப்பட்டார்கள் என்றால், மூஸா மற்றும் ஈஸா ஆகியோர் உயிருடன் இருந்திருந்தால் மிகவும் ஏக்கத்துடன் அங்கு அடக்கம் செய்யப்படுவதற்கு விருப்பம் கொண்டிருப்பார்கள்**!**"

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், இன்னும் சில விஷயங்களும், மேற்கோள்களும் உள்ளன. இன்ஷா அல்லாஹ்! வரும் காலத்தில் அவை எடுத்துரைக்கப்படும் என்று கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ

وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ

ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**